	கூட்டுத் தொகை		*200.20*
	ஏனைய 20 மாவட்டங்களுக்கு		
3.	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை	நகராட்சி நிருவாகம்	*68.61*
		பேரூராட்சிகள்	*14.34*
		தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் (மாநிலம் முழுமைக்கும்)	*54.25*
		ஊரக வளர்ச்சித் துறை	*154.97*
	கூட்டுத் தொகை		*292.17*
4.	குடிநீர் வழங்கலுக்குத் தேவைப்படும் மொத்தத் தொகை		*492.37*
		மொத்தம்	**492.37**

(ii) நாட்டின் முதன்மைத் தொழிலான வேளாண் தொழிலை ஊக்குவிப்பதிலும், வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதிலும் முதன்மை மாநிலமாக விளங்கும் தமிழகத்தில் நடப்பாண்டில் குறுவை நெல் சாகுபடியினை மேற்கொள்வது குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 6–6–2014 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு 19 விழுக்காடு அளவுக்கு மழை குறைவாகப் பெய்த போதிலும், மண் வளத்தை மேம்படுத்தியதன்மூலமும், நவீன உத்திகளைக் கையாண்டதன்மூலமும், தேவையான விதை, நுண்ணூட்டச் சத்து, உரங்கள் ஆகியவற்றை இருப்பில் வைத்து உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு அளித்ததன்மூலமும், இதுவரை இல்லாத சாதனை அளவாக 103.38 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உணவு தானிய உற்பத்தி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

2014 ஜூலை 22] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

தற்போதுள்ள சூழ்நிலையில் குறுவை சாகுபடியை விவசாயிகள் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள்:

1. கடந்த இரண்டு ஆண்டுகளாக வழங்கியதுபோல், இந்த ஆண்டும் விவசாயத்திற்கு 12 மணி நேர தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்குவது உறுதி செய்யப்படும்.

2. நீர் ஆதாரங்களில் வயலுக்கு நீர் வீணாகாமல் கொண்டு செல்ல உதவும் வகையில், ஒவ்வொருவருக்கும் 600 அடி எச்.டி.பி.இ. குழாய்கள் 700 விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.

3. டெல்டா பகுதிகளில் காவேரி நீர் பெறப்படும்போது, வாய்க்கால் பாசனம்மூலம் அதிக அளவு நெல் சாகுபடி மேற்கொள்ளும்பொருட்டு, 100 விழுக்காடு மானியத்தில் சமுதாய நாற்றங்கால் முன்னரே அமைத்து, வாய்க்கால்களில் நீர் பெறப்படும் சமயத்தில் நடவுப் பணி மேற்கொள்ள ஏதுவாக நெல் நாற்றுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4. டெல்டா பகுதிகளில் 100 விழுக்காடு மானியத்தில் நெல் நடவு இயந்திரங்களை 200 விவசாயிகள் குழுக்களுக்கு வழங்கி நடவுப் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

5. வேலையாட்கள் பற்றாக்குறை அதிகம் உள்ளதால், குறுவை சாகுபடி மேற்கொண்டுள்ள பகுதிகளில் சரியான தருணத்தில் களையெடுத்து, உயர் மகசூல் பெற வழிவகை செய்யும் வகையில், 100 விழுக்காடு மானியத்தில் இயந்திரக் களையெடுக்கும் கருவிகள் 200 விவசாயக் குழுக்களுக்கு வழங்கப்படும்.

6. குறுவை சாகுபடி மேற்கொண்டுள்ள பகுதிகளில் உயரிய தொழில்நுட்பங்கள் கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், உயர் மகசூல் தரும் இடுபொருட்களான நெல் நுண்ணூட்டக் கலவை, துத்தநாக சல்பேட் ஆகியவை தலா 1 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு 100 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2014 ஜூலை 22

7. உயிர் உரங்கள் மற்றும் திரவ உயிர் உரங்கள் தலா 50,000 ஏக்கர் பரப்பளவிற்கு 100 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும். இதேபோன்று 60,000 ஏக்கர் பரப்பளவிற்கு ஜிப்சம் 100 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.

8. மேற்காணும் திட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலம் அரசுக்கு 32 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இந்த நடவடிக்கைகளினால், டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீர் மூலம் விவசாயிகள் கூடுதல் பரப்பில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளவும், உயர் மகசூல் பெறவும் வழிவகை ஏற்படும்.

மேலும், மழை நிலவரம் மற்றும் நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு குறித்து அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. வரக்கூடிய மாதங்களில் மழை அளவைக் கண்காணித்தும், நீர்நிலைத் தேக்கங்களில் நீர் இருப்பு அளவைக் கண்காணித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையின் அடிப்படையில் அரசால் தொடர்ந்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். தமிழ்நாட்டில், கன்னியாகுமரி, திருநெல்வேலியின் ஒரு பகுதியைத் தவிர்த்து, பெரும்பான்மையான பகுதிகளில் மழை இல்லாததனால், கடந்த இரண்டு வருட காலமாக வறட்சி தொடருகிறது. அதனால் கடும் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. அனைத்து அணைகளிலும், கடந்த ஆண்டு இதே காலத்தில் இருந்த நீரின் அளவைவிட, மூன்றில் ஒரு பகுதியாக நீரின் அளவு குறைந்துள்ளது. நவதானிய உற்பத்தி முற்றாக இல்லாமல் போய்விட்டது. பால், கரும்பு போன்றவற்றின் உற்பத்தி மூன்றில் ஒரு பகுதியாகக் குறைந்துள்ளது. காவேரி டெல்டா பகுதிகளிலுள்ள பெரும்பாலான நிலங்களில் குறுவை சாகுபடியைத் துவங்க முடியாத நிலை காணப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், சுருக்கமாகச் சொல்லுங்கள்.